# இன உறவுக்கு மொழியறிவே பிரதானமானது

இலங்கை அரசியலமைப்பில் நாட்டின் தேசிய மற்றும் நிர்வாக மொழிகளாகத் தமிழ் மொழியும் சிங்கள மொழியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி நாட்டின் எப்பகுதியிலுமுள்ள அரச அலுவலகங்களுடன் அவரவர் தம் தாய்மொழியில் தொடர்புகொள்ளவும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் சட்டப்படியான உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதில் பல தடைகளுள்ளன. அத்தடைகளைத் தாண்டி சட்டரீதியான மொழியுரிமையைப் பயன்படுத்தும் வழிகாணப்பட வேண்டும். தமிழ்மொழியின் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள் அதை மறந்து தமிழ்மீது அதிகாரம் செலுத்துவதற்காகக் குடுமிச் சண்டையில் ஈடுபட்டு அசிங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எது எப்படியிருப்பினும் மொழிக்குள்ள உரிமைகள் எவ்வாறுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை தமிழ் மக்களுக்குண்டு. நாடு முழுவதற்குமான தேசிய மற்றும் நிர்வாக மொழிகளாக சிங்களமும் தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டினதும் முதன்மை நிர்வாக மொழியாகத் தமிழ் உள்ளதுடன் ஏனைய ஏழு மாகாணங்களிலும் முதன்மை நிர்வாக மொழியாகச் சிங்களம் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதுவித தடையோ தாமதமோ இன்றி பொதுமக்கள் தமிழ் மொழியில் கருமமாற்றிக் கொள்ள வழியிருப்பதுடன் சிங்கள மக்களும் அந்த உரிமையை அனுபவிக்க முடிகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள ஏழுமாவட்டங்களிலுள்ள ஐம்பத்தாறு பிரதேச செயலகப் பிரிவுகள் சிங்களத்துடன் தமிழும் இணை நிர்வாக உரிமை கொண்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, குறித்த அப்பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள அரச அலுவலகங்கள், வங்கிகள்,கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற அரசாங்கத்துடன் தொடர்புடைய சகல அலுவலகங்களிலும் தமிழ் மக்கள் எதுவித கெடுபிடியோ, தாமதமோ, தயக்கமோ இன்றி தமிழ் மொழியில் தமது கருமங்களை ஆற்றிக் கொள்ளலாம் என்கின்றது நாட்டில் சட்டம்.

நடைமுறையில் இது நடைபெறுவதில்லை. இருப்பினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே ஏனைய மாகாணங்களிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் எவை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையிலே மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளும் தமிழ்மொழியை நிர்வாக உரிமையாகக் கொண்டவை. நுவரெலியா மாவட்டம் இரு மொழி நிர்வாக உரிமைகொண்ட மாவட்டம்.

அம்பகமுவ, வலப்பனை, கொத்மலை, நுவரெலியா, ஹங்குரங்கெத்த ஆகியவை நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக உரிமை கொண்ட செயலகப்பிரிவுகளாகும்.

அதேபோல் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை, அப்புத்தளை, எல்ல, வெலிமடை, பதுளை, ஹாலிஎல, ஹல்துமுல்ல, பசறை, மீகாகிவுல, லுணுகல, சொரணதோட்ட ஆகிய பதினொரு பிரதேச செயலகப் பிரிவுகளும் கண்டி மாவட்டத்தின் அக்குறணை, தெல்தோட்டை, பன்வில, பஸ்பாகே கோறளை, உடபலாத்த, கங்கஇஹல கோறளை, கண்டி நகர் சூழ்பிரதேசம் மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை, அம்பன்கங்ககோறளை, இறத்தோட்டை, உக்குவளை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளும் சிங்களத்துடன் தமிழையும் இணை நிர்வாக மொழியாகக் கொண்டவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும் புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி, முந்தல், புத்தளம், வண்ணாத்தி வில்லு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுடன் கொழும்பு மாவட்டத்தின் திம்பிரிகஸ்யாய, கொழும்பு, கொலன்னாவ, தெஹிவளை, கல்கிசை, களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, காலி மாவட்டத்தின் காலி நகர் சூழ் பிரதேசம், கம்பஹா மாவட்டத்தின் வத்தளை, நீர்கொழும்பு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்குமான நிர்வாகப் பிரதேசங்களாகும்.

பொலன்நறுவை மாவட்டத்தின் லங்காபுர, வெலிகந்த மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, இரத்தினபுரி, கொடக்கவெல, காவத்தை, கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல, தெரணியகலை, எட்டியாந்தோட்டை என்பவற்றுடன் அநுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவ, ஹொரவப்பொத்தானை, கஹட்டகஸ்திகிலிய என்பவையும் இரு மொழிகளுக்கும் நிர்வாக உரிமையுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளாகும்.

அவ்வாறே குருணாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டி கிழக்கு மற்றும் மாத்தறை மாவட்டத்தின் கொடபொல பிரதேச செயலகப் பிரிவும் தமிழ் மொழி உரிமை கொண்ட பிரதேசசெயலகப் பிரிவுகளாகும்.

நாட்டிலுள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் 162 பிரிவுகள் சிங்களத்தை நிர்வாக மொழியாகக் கொண்ட பிரதேச செயலகப்பிரிவுகளாகவும் 62 பிரிவுகள் தமிழ் நிர்வாக மொழிகளாகக் கொண்டவையாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சியவை இரு மொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மொழிப்பிரச்சினையைத் தீர்த்து வைத்து நாட்டு மக்கள் மத்தியிலே சகவாழ்வுக் கொள்கையை, புரிந்துணர்வை, இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக மொழியுரிமையைப் பயன்படுத்தப் பல திட்டங்கள் வரையப்பட்டிருந்தன. அவை நடைமுறைப்படுத்தப்பட பொறுப்புடன் எதுவுமே ஆற்றப்படாமலிருப்பது திட்டமிட்டு புறக்கணிப்பது இனங்களுக்கிடையே பிரிவினைவாதத்தைத் தூண்டும் பயங்கரவாதச் செயற்பாடேயாகும்.

மொழியென்பது ஒருவரை ஒருவர் ஒருவரது கருத்தை மற்றவர் கேட்டு, பார்த்து, வாசித்துத் தெரிந்து கொள்வதற்கான சாதனம், அச்சாணி. அந்த அச்சாணியைக் கழற்றி விட்டு வண்டியை ஓட்ட முற்படுவது போன்றதே மொழி தொடர்பான நாட்டின் நிலைமையுள்ளது. நாட்டின் மொழிக் கொள்கையை மனச்சுத்தியுடன் நேர்மையாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே இனங்களுக்கிடையேயான உறவு வலுப்பெற வழியுண்டு.

**த.மனோகரன்**
(துணைத் தலைவர்
அகில இலங்கை இந்துமாமன்றம்)